திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின்
செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: திரு. சி. தங்கவேல்,பி.ஏ.,

ந.க.எண். 21462/2012/அ3 நாள்.29.01.2013.

பொருள்: பொதுப்பணி — தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2006-2007ல் நடத்தப்பட்ட போட்டித்தேர்வு- திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகிற்கு சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 ஒதுக்கீடு செய்யப்பட்டது- செல்வி. மு.விஜிலா என்பவரது பணியினை சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3 நிலையில் - பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

படிக்கப்பட்டது:
1. செயலாளர் , தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை கடித எண். 3101/ PSD-A/2009, நாள்.12.06.2012.
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொ)செயல்முறைகள் ந.க.எண். 21462/2012/அ3, நாள். 11.07.2012.

------

**ஆணைகள்:**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி-4 போட்டித்தேர்வுகள் 2006.-2007-ல் நடத்தப்பட்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற்று, திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகிற்கு பார்வை 1-ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2-ன்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3ஆகப் பணிபுரிந்து வரும் செல்வி. மு.விஜிலா என்பவரது பணி 23.07.2012 முற்பகல் முதல் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலையில் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

2) தனியரின் பணி 23.07.2012 முற்பகல் வரன்முறை செய்யப்பட்ட அன்றைய தினத்திலிருந்து தகுதிகாண் பருவம் தொடங்குவதாகவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

3) தகுதிகாண் பருவம் தொடங்கும் தேதியிலிருந்து 3 ஆண்டு காலத்திற்குள் 2 ஆண்டு காலம் தகுதிகாண் பருவம் மற்றும் **"Office Automation கணினிப் பயிற்சி"** யினை முடித்திட வேண்டும்.

4) இவ்வுத்திரவு தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

30/1/13

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது)
திண்டுக்கல்.

பெறுநர்
செல்வி. மு.விஜிலா,
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-3,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திண்டுக்கல்.

30/1/13

நகல்: "அ3" உதவியாளர் இருப்புக் கோப்பிற்கு.